உ

குகமயம்



# முருகன் பாமாலைத் திரட்டு

CEYLON HINDU
CHRISTIAN UNION

Galle Road, Bambalapitiya,
Colombo-4.

வெகு விரைவில் எமது சங்கத்தினூடாக இந்து சமயந் நூல்கள் (தேவார, திருப்புகழ், திருவாசகம்) இந்து சமய சம்பந்தமான படங்கள், வீடியோ படப் பிரதிகள் இலவசமாக வழங்கப்படும். அதே போல் கிறிஸ்தவ நூல்கள், செப மாலைகள் மற்றும், படங்கள், வீடியோ பிரதிகள் பெற்றுக் கொள்ள விரும்புவோர் எமது சங்கத்தை நாடவும்.

## இலங்கை இந்து கிறிஸ்தவ

## சங்கம்

காலி வீதி, பம்பலப்பிட்டி.

உ

# முருகன்
# பாமாலைத் திரட்டு





# பிள்ளையார் துதி

— த னுருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடு மவரிடர்
கடிகண பதிவர அருளினர் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை யிறையே

௳

சிவமயம்

# அணிந்துரை

உபந்நியாசரத்தினம் குமரகுருமணி -
சிவாச்சார்ய திலகம்; சிவஸ்ரீ சாம்பசிவ
ஷண்முகநாதக் குருக்கள்.

கலியுகத்தில் கண்கண்ட தெய்வமாகிய நம் சொந்தப் பெருமான் கந்தப்பெருமாளு கும். நம் முன்னோர்கள், ரிஷிகள், ஞானியர். நாயன்மார் எத்தனையோ பேர் தமது அனுபவத்தில் கந்தப் பெருமானின் திருவருள் பிரவாகத்தை அனுபவித்து எமக்கு எத்தனையோ திருவாசகம், தேவாரம் திருப்புகழ் போன்ற அருமையான தமிழ் நூல்கள் மூலம் நமக்கு கொடுத்துள்ளனர்.

அது போல் நமக்கு தேவராய சுவாமிகள் கந்தபெருமான் நமக்கு கவசமாக இருந்து காக்க வேண்டுமென்ற பெருநோக்கோடு அருளிப் பாடியதுதான் கந்தசஷ்டிகவசம் என்னும் பாடலாகும். இதனை ஆசாரத்

துடன் முழுமனதோடு ஓதி வருவோர்க்கு எந்த நோயும் வராது வந்த நோயும் சூரியனைக்கண்ட பனிபோல் காணுமல் போய் விடும். இது எமது சொந்த அனுபவமாகும்.

இந்த நூல் எல்லாரது இல்லத்திலும் இருக்கவேண்டியது மட்டுமல்ல நாள்தோறும் ஓதவேண்டியதுமாகும். இதனை வெளியிடும் அன்பர் நடராஜா ஸ்ரீஸ்கந்தராஜா அவர்கள் மிகவும் முருகபக்தி கொண்டவர். அவர் இன்னும் பல புத்தகங்களை வெளியிட்டு பக்தியை பரப்பி வளர்த்து வர எல்லாம்வல்ல முருகப் பெருமான் திருவருள் கொண்டு ஆசி கூறி சகல செல்வ யோகமிக்க பெருவாழ்வு வாழ வாழ்த்துகிறோம்.

குருவாய் வருவாய் அருள்வாய் குகனே!

சுபம்.

இங்ஙனம்

சிவஸ்ரீ சாம்பசிவ ஷண்முகநாதக் குருக்கள்
ஸ்ரீகௌரீ ஜோதிஷ நிலையம்
130, கொட்டாஞ்சேனை வீதி
கொழும்பு—13

உ

சிவமயம்

# முருகன் பாமாலைத் திரட்டு

உருவாய் அருவாய் உளதாய் இலதாய்
மருவாய் மலராய் மணியாய் ஒளியாய்
கருவாய் உயிராய்க் கதியாய் விதியாய்க்
குருவாய் வருவாய் அருள்வாய் குகனே

முருகனே செந்தி முதல்வனே மாயோன்
மருகனே ஈசன் மகனே ஒருகைமுகன்
தம்பியே நின்னுடைய தண்டைக்கால்
[எப்பொழுதும்
நம்பியே கைதொழுவேன் நான்.

## தேவாரம்

வள்ளி முலைதோய் குமரன்
தாதை வான்தோயும்
வெள்ளி மலைபோல் விடையொன்
றுடையான் மேவுமூர்

தெள்ளிவரு நீரரிசில் தென்பாற்
    சிறைவண்டும்
புள்ளும் மலி பூம்பொய்கை
    சூழ்ந்த புத்தூரே

ஆறுகொலா மரங்கம் படைத்தென
ஆறுகொலா மவர்தம் மகளார்முகம்
ஆறுகொலா மவர்தார்மிசை வண்டின்கால்
ஆறுகொலாஞ் சுவையாக் கினதாமே.

பொரும்பல மதுடைய சூரன்
    தாருகனைப் பொருது
பொன்றுவித்த பொருளினைமுன்படைத்
    துகந்த புனிதன்
கரும்புவிலின் மலர்வாளிக்
    காமனுடன் வேவக்
கனல் விழித்த கண்ணுதலோன்
    கருதுமூர் வினவில்
இரும்புனல் வெண்டிரை பெருகி
    யேல மிலவங்க
மிருகரையும் பொருதலைக்கும்
    குமரிசிலின் தென்கரைமேல்

கரும்புனைவெண் முத்தரும்பிப்
பொன்மலர்ந்து பவளக்
கவின்காட்டும் கடிபொழில்சூழ்
கலயநல்லூர் காணே

## திருவாசகம்

முத்தனே முதல்வா முக்கண்ணு முனிவா
மொட்டறு மலர்பறித் திறைஞ்சிப்
பத்தியாய் நினைந்து பரவுவார் தமக்குப்
பரகதி கொடுத்தருள் செய்யும்
சித்தனே செல்வத் திருப்பெருந் துறையிற்
செழுமலர்க் குருந்தம் மேவியசீர்
அத்தனே யடியேன் ஆதரித் தழைத்தால்
அதந்துவே என்றரு ளாயே.

## திருவிசைப்பா

நீறணி பவளக் குன்றமே நின்ற
நெற்றிக்கண் ணுடையதோர் நெருப்பே
வேறணி புவன போகமே யோக
வெள்ளமே மேருவில் வீரா

வாறணி சடையெம் மற்புதக் கூத்தா
வம்பொன்செய் யம்பலத் தரசே
யேறணி கொடியெம் மீசனே யுன்னைத்
தொண்டனே னிசையுமா றிசையே

மாலுலா மனந்தந் தென்கையிற் சங்கம்
வவ்வினன் மலைமகண் மதலை
மேலுலாந் தேவர் குலமுழு தாளுங்
குமரவேள் வள்ளிதன் மணாளன்
சேலுலாங் கழனித் திருவிடைக் கழியிற்
திருக்குரா நிழற்கீழ் நின்ற
வேலுலாந் தடக்கை வேந்தனென் சேந்த
னென்னுமென் மெல்லிய லிவளே

## திருப்பல்லாண்டு

சீரும் திருவும் பொலியச்
சிவலோக நாதன் சேவடிக்கீ
ழாரும் பெறாத வறிவுபெற்றேன்
பெற்றதார் பெறுவா ருலகி
லூருமுலகங் கழற வுழறி
யுமைமண வாளனுக்காட்
பாரும் விசும்பு மறியும் பரிசுநாம்
பல்லாண்டு கூறுதுமே;

# திருப்புராணம்

ஆறிரு முகங்கள் போற்றி
முகம்பொழி கருணை போற்றி
ஏவருந் துதிக்க நின்ற
ஈராறு தோள்கள் போற்றி காஞ்சி
மாவடி வைகும் செவ்வேள்
மலரடி போற்றி அன்னுன்
சேவலும் மயிலும் போற்றி
திருக்கைவேல் போற்றி போற்றி

# திருப்புகழ்

அபகார நிந்தைபட் டுழலாதே
அறியாத வஞ்சரைக் குறியாதே
உபதேச மந்திரப் பொருளாலே
உனைநான் நினைந்தருள் பெறுவேனே
இபமா முகன்தனக் கிளையோனே
இமவான் மடந்தை உத்தமிபாலா
ஜெபமாலை தந்தசற் குருநாதா
திருவாவி னன்குடிப் பெருமானே

ஏறுமயில் ஏறிவிளை யாடுமுக மொன்றே
ஈசனுடன் ஞானமொழி பேசுமுக மொன்றே
கூறுமடி யார்கள்வினை தீர்த்தமுக மொன்றே
குன்றுருவ வேல்வாங்கி நின்றமுக மொன்றே
மாறுபடு சூரனை வதைத்தமுக மொன்றே
வள்ளியை மணம்புணர வந்தமுக மொன்றே
ஆறுமுக மானபொருள் நீயருளல் வேண்டும்
ஆதியரு ணாசல மமர்ந்த பெருமாளே

## திருவருட்பா

உன்னை ஒழிய ஒருவரையும் நம்புகிலேன்
பின்னை ஒருவரையான் பின்செல்லேன்
— பன்னிருகைக்
கோலப்பா வானோர் கொடியவினை தீர்த்
வேலப்பா செந்தி வாழ்வே. [தருளும்

ஒருமையுட னினது திருமலரடி நினைக்கின்ற
உத்தமர்தம் உறவு வேண்டும்
உள்ளொன்றுவைத்து புறமொன்றுபேசுவார்
உறவு கலவாமை வேண்டும்
பெருமைபெறும் நினது புகழ் பேசவேண்டும்
பொய்மை பேசா திருக்கவேண்டும்

பெருநெறி பிடித்தொழுக வேண்டும்
மதமான பேய்பிடியா திருக்கவேண்டும்
மருவு பெண்ணாசையை மறக்கவேண்டும்
உனை மறவாதிருக்க வேண்டும்
மதிவேண்டும் நின்கருணை நிதிவேண்டும்
நோயற்ற வாழ்வில்நான் வாழவேண்டும்
தருமமிகு சென்னையில்
கந்த தோட்டத்துள் வளர்
தலமோங்கு கந்தவேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வ மணியே.

## கந்தர் சஷ்டி கவசம்.

இதனை நாள்தோறும் ஒருமனதுடன் ஓதிவர
பேய், பிசாசு, துன்பம், நோய், பகை,
நீங்குவதோடு;
செல்வம், புகழ், ஐஸ்வரியம் உண்டாகும்.

காப்பு. (நேரிசை வெண்பா)

**துதிப்போர்க்கு வல்வினைபோந் துன்பம்போம்**
**நெஞ்சிற்**
**பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக்**
**— கதித்தோங்கும்**
**நிஷ்டையும் கைகூடும் நிமலரருள் கந்தர்**
**சஷ்டி கவசம் தனை.**

(குறள் வெண்பா)

**அமரரிடர் தீர வமரம் புரிந்த**
**குமரனடி நெஞ்சே குறி**

## நூல்

(நிலைமண்டில ஆசிரியப்பா)

சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக் குதவுஞ் செங்கதிர் வேலோன்
பாத மிரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண்கிணி யாட
மைய நடஞ்செய்யும் மயில்வா கனனார்
கையில்வே லாலெனைக் காக்கவென் றுவந்து
வரவர வேலா யுதனார் வருக
வருக வருக மயிலோன் வருக
இந்திரன் முதலா யெண்டிசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக
வாசவன் மருகா வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக
ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறிடும் வேலவன் நித்தம் வருக
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக
சரவண பவனார் சடுதியில் வருக

ரஹண பவச ரரரர ரரர
நிஹண பவச றிறிறி றிறி
வினபவ சரஹ வீரா நமோநம
நிபவ சரஹண நிறநிற நிறெண
வசர ஹணப வருக வருக
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக
என்னை யாளும் இளையோன் கையில்
பன்னிரண் டாயுதம் பாசாங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரண் டிலங்க
விரைந்தெனைக் காக்க வேலோன் வருக
ஐயுங் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையும் கிலியும்
கிலியுஞ் சௌவும் கிளரொளி யையும்
நிலைபெற் றென்முன் நித்தமு மொளிரும்
சண்முகன் றீயும் தனியொளி யொவ்வும்
குண்டலி யாஞ்சிவ குகன்றினம் வருக
ஆறு முகமும் அணிமுடி யாறும்
நீறிடு நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச் செவ்வாயும்
நன்நெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலகு குண்டலமும்
ஆறிரு திண்புயத் தழகிய மார்பில்

பல்பூ ஷணமும் பதக்கமுந் தரித்து
நன்மணி பூண்ட நவரத்ன மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழ குடைய திருவயி றுந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளி பட்டும்
நவரத்ன பதித்த நற்சீ ராவும்
இருதொடை யழகும் இணைமுழந் தாளும்
திருவடி யதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செகண
மொகமொ மொகமொக மொகமொக மொகென
நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி ரிரிரி
டுடுடு டுடுடு டுடுடு டுடுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேண் முந்து
என்றனை யாளும் எரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந் துதவும்
லாலா லாலா லாலா வேஷமும்
லீலா லீலா லீலா விநோதனென்

றுன்திரு வடிவை உறுதியென் றெண்ணும்
என்றலை வைத்துன் இணையடி காக்க
என்னுயிர்க் குயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வே லிரண்டு கண்ணினைக் காக்க
விதிசெவி யிரண்டும் வேலவர் காக்க
நாசிக ளிரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத் திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்ன மிரண்டும் கதிர்வேல் காக்க
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை யிரத்ன வடிவேல் காக்க
சேரிள முலைமார் செவ்வேல் காக்க
வடிவே லிருதோள் வளம்பெறக் காக்க
பிடரிக ளிரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதி னாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க
சிற்றிடை யழகுறச் செவ்வேல் காக்க

நாணாங் கயிற்றை நல்வேல் காக்க
ஆண்குறி யிரண்டும் அயில்வேல் காக்க
பிட்ட மிரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வடிவேல் காக்க
பணைத் தொடை யிரண்டும் பருவேல் காக்க
கணைக்கான் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிர லடியிணை அருள்வேல் காக்க
கைக ளிரண்டும் கருணைவேல் காக்க
முன்கை யிரண்டும் முரண்வேல் காக்க
பின்கை யிரண்டும் பின்னவ ளிருக்க
நாவிற் சரஸ்வதி நற்றுணை யாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பா நாடியை முனைவேல் காக்க
எப்பொழு தும்மெனை எதிர்வேல் காக்க
அடியேன் வசனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பக றன்னில் வச்சிரவேல் காக்க
அரையிரு டன்னில் அனையவேல் காக்க
ஏமத்திற் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமத நீக்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியி நோக்க

தாக்க தாக்க தடையறத் தாக்க
பார்க்க பார்க்க பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை யகல
வல்ல பூதம் வலாஷ்டிகப் பேய்கள்
அல்லற் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைக டின்னும் புழைக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப்
பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரமரா க்ஷதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசி காட்டேரி இத்துன்ப சேனையும்
எல்லினு மிருட்டிலும் எதிர்ப்படு மண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியோ டனைவரும்
விட்டாங் காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டா ளர்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந் தோடிட
ஆனை யடியினில் அரும்பா வைகளும்
பூனை மயிரும் பிள்ளைக ளென்பும்
நகமு மயிரும் நீண்முடி மண்டையும்
பாவைக ளுடனே பலகல சத்துடன்
மனையிற் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டியச் செருக்கும் ஒட்டியப் பாவையும்
காசும் பணமும் காவுடன் சோறும்

ஓதுமஞ் சனமும் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றான் வஞ்சகர் வந்து வணங்கிட
காலதூ தாளெனைக் கண்டாற் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட் டலறி மதிகெட் டோட
படியினின் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுட னங்கம் கதறிடக் கட்டு
கட்டி யுருட்டு கால்கை முறிய
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு முழிகள் பிதுங்க
செக்கு செக்கு செதிற்செதி லாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்
பற்று பற்று பகலவன் றணலெரி
தணலெரி தணலெரி தணலது வாக
விடுவிடு வேலை வெண்டது வோட
புலியு நரியும் புன்னரி நாயும்
எலியுங் கரடியும் இனித்தொடர்ந்தோடத்
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடித்துய ரங்கம்
ஏறிய விஷங்கள் எளிதினி லிறங்க

ஒளிப்புஞ் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதஞ் சயித்தியம் வலிப்புப் பித்தம்
சூலைசயங் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் பிரிதி
பக்கப் பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத் தரணை பருவரை யாப்பும்
எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லா தோட நீயெனக் கருள்வாய்
ஈரே ழுலகமும் எனக்குற வாக
ஆணும் பெண்ணும் அனைவரு மெனக்கா
மண்ணா ளரசரும் மகிழ்ந் துற வாகவும்
உன்னைத் துதிக்க உன்றிரு நாமம்
சரஹண பவனே பவமொழி பவனே
அரிதிரு மருகா அமரா பதியைக்
காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர்வே லவனே
கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை யழித்த இனியவேள் முருகா
தணிகா சலனே சங்கரன் புதல்வா
கதிர்கா மத்துறை கதிர்வேள் முருகா
பழனிப் பதிவாழ் பால குமார

ஆவினன் குடிவாழ் அழகிய வேலா
செந்தின்மா மலையுறும் செங்கல்வ ராயா
சமரா புரிவாழ் சண்முகத் தரசே
காரார் குழலாள் கலைமக ளன்றாய்
என்னு மிருக்க யானுனைப் பாட
எனைத் தொடர்ந் திருக்கும் எந்தை முருகனை
பாடினே னாடினேன் பரவச மாக
ஆடினே னாடினேன் ஆவினன் பூதியை
நேச முடன்யான் நெற்றியி லணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்னரு ளாக
அன்புட னிரக்ஷி அன்னமுஞ் சொன்னமும்
மெத்தமெத் தாக வேலா யுதனார்
சித்திபெற் றடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்
வாழ்க வாழ்க வாரணத் துவசம்
வாழ்க வாழ்கவென் வறுமைக ணீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை யடியேன் எத்தனை செய்தால்

பெற்றவ னீகுரு பொறுப்ப துன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவ ளாமே
பிள்ளையென் றன்பாய்ப் பிரிய மளித்து
மைந்த னென்மீது மனமகிழ்ந் தருளித்
தஞ்சமென் றடியார் தழைத்திட வருள்செய்
கந்தர் ஷஷ்டி கவசம் விரும்பிய
பாலன் றேவ ராயன் பகர்ந்ததைக்
காலையில் மாலையில் கருத்துட னாளும்
ஆசா ரத்துட னங்கந் துலக்கி
நேச முடனொரு நினைவது வாகிக்
கந்தர் சஷ்டி கவச மிதனைச்
சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்
எந்நாள் முப்பத் தாறுருக் கொண்டு
ஓதியே செபித்து உகந்துநீ றணிய
அஷ்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்ன ரெண்மர் செயல தருளுவர்
மாற்றல ரெல்லாம் வந்து வணங்குவர்
நவகோண் மகிழ்ந்து நன்மை யளித்திடும்
நவமத னென்வும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளுமீ ரெட்டா வாழ்வர்
கந்தர்கை வேலாங் கவசத் தடியை
வழியாய்க் காண மெய்யாய் விளங்கும்

விழியாற் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லா தவரைப் பொடிப்பொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்காரத் தடி
அறிந்தென துள்ளம் அஷ்டலட் சுமிகளில்
வீரலட் சுமிக்கு விருந்துண வாகச்
சூரபத் மாவைத் துணித்தகை யதனால்
இருபத் தோழ்வர்க் குவந்தமு தளித்த
குருபரன் பழனிக் குன்றினி லிருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி
எனைத்தடுத் தாட்கொள என்றன துள்ளம்
மேவிய வடிவுறும் வேலவ போற்றி
தேவர்கள் சேனா பதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி
திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெட்சி புனையும் வேளே போற்றி
உயர்கிரி கனக சபைக்கோ ரரசே
மயில்நட மிடுவோய் மலரடி சரணம்
சரணஞ் சரணம் சரஹண பவஓம்
சரணஞ் சரணம் சண்முகா சரணம்.

# கந்தர் கவசம்

**அமரர் துயர்தீர அன்று பொருத**
**குமரனடிப் போதினையே கூறு.**

சரவண பவகுக சண்முக முருக
சுரமகள் தழுவிய சுந்தர முருக
கருக்குழி தனில்விழார் கண்டு மகிழத்
திருப்பரங் குன்றில் திகழ்ந்தருள் முருக
மந்திர முனிவோர் வந்து வழிபடச்
செந்தில் நகரில் சேர்ந்தருள் முருக
காவியும் தண்டும் கண்டோர் பரவ
ஆவினன் குடியில் அடைந்தருள் முருக
நீரகத் தோர்கள் நித்தலும் தொழுதெழ
ஏரக வேற்பில் எழுந்தருள் முருக
வந்த மாதவர் வகைவகை துதிசெயக்
கந்தமாதனத்தில் கலந்தருள் முருக
அயிலைப் பொருவிழி யரம்பைகள் பரவக்
கயிலைச் சிலம்பில் கமழ்ந்தருள் முருக
கருமலை பொடிபடக் கண்டவர் சூழத்
திருமலை யதனில் சிறந்தருள் முருக
வேங்கை யுடைவனை வேதியர் துதிக்க
வேங்கட கிரிவயின் விரைந்தருள் முருக
பணியணிபரசிவன்பழமறைப்பொருள் பெறத்
தணிகையங் குவட்டில் தழைத்தருள் முருக

நள்ளிருள் தன்னில் நாச்சியார் நலமுற
வள்ளி மலையில் வாழ்ந்தருள் முருக
கள்ளுறல் விளவெறி கண்ணன் சிவமுறக்
குன்றத்தூரில் குளிர்ந்தருள் முருக
இழுக்கண்டாத்தவர் இருந்தருள் அணிபெறக்
கழுக்குன்றிடத்தில் கனிந்தருள் முருக
சூறையாம்புலன் சுழல்வழிப் படார் தொழப்
பேறை மலையில் பீடருள் முருக
குயிலாம் எனுமொழிக் குஞ்சரி மகிழ்வுற
மயிலாசனத்தில் அமர்ந்தருள் முருக
தூரி சுருத்தவர்பலர் தூநல மடைவான்
திரிசிரா மலையில் திகழ்ந்தருள் முருக
பொற்புரியவர் நலம் பொருந்திப் பிழைக்கக்
கற்குடியகத்தில் கவின்பெறு முருக
சிரத்தையுடன் பணி சீரியோர் அழகுற
இரத்தின கிரியில் இருந்தருள் முருக
இராத இடையவர் இருபுற மருவ
விராலி மலையில் விரைந்தருள் முருக
அநர்தியாகிய அமலன் துதிசெய
விநாயக மலையில் விருப்பருள் முருக
கொங்கோடலர்தொடு குரவர் அணிபெறச்
செங்கோடதனில் சேர்ந்தருள் முருக

கல்வி விழைகுநர் கலந்து வழிபடக்
கொல்லி மலையில் குழைந்தருள் முருக
ஏனமாகிய இறைவன் பதம்பெற
ஞானமலையில் நயந்தருள் முருக
ஒப்புயர் வில்லா ஒருவன் அருளுறச்
செப்பு வெற்பில் செழித்தருள் முருக
இருடிகள் தவவினை, யிளைப்புறு வண்ணம்
குருடி மலையில் குறித்தருள் முருக
எங்குள பொருளும் ஏற்பவர் பெற்றுயக்
கொங்கண கிரியில் கூர்ந்தருள் முருக
இடுங்குணம்பெரிதேய்இறைமகன்உயிர்பெற
கொடுங் குன்றதனில் குனித்தருள் முருக
பன்றிக் கன்றருள் பரன்பிர ணவம்பெறக்
குன்றக் குடியில் கொடுத்தருள் முருக
வசுக்கள் வழியுற வந்து பராவிடப்
பசுமலை யிடத்தில் பதிந்தருள் முருக
நதியணி யரனிகர் நற்றமிழ் முனிபெறப்
பொதிகை மலையில் புகழ்ந்தருள் முருக
அழகிய பாண்டியன் அடியிணை பெற்றுக்
கழுகு மலையில் கவிந்தருள் முருக
துள்ளிய வினையில் தொடக்குறுர் பாவ
வள்ளி யூரில் வதிந்தருள் முருக

எதிரறு தவத்தோர் இடருறு வண்ணங்
கதிர்கா மத்தில் கசிந்தருள் முருக
கழைமலர் பிடிமதன் கவின்பெறப் போற்றப்
பழமுதிர் சோலையில் பதிந்தருள் முருக
வருக முருக வருக முருக
கருணை யுடனே கண்ணெதிர் நன்கு
ஆறுமுகமும் அழகிய முடியும்
நீறு புனைந்த நிகரறு நெற்றியும்
புகலுறு புருவமும் புனைந்த சுட்டியும்
மகர குண்டலம் மாட்டிய செவியும்
கண்டிகை பூண்ட கவின் பெறு களமும்
விண்டிகை மதிக்க விளங்குறு மார்பும்
பன்னிரு தோளும் பவள வாயும்
கன்னியர் இருவர் கலந்த கோலமும்
அபய வரதமும் அயிலும் மயிலும்
சுபமருள் பங்கய சுந்தர வடிவம்
கோழிக் கொடியும் கூர்நவ வீரரும்
வாழி மொழிபகர் வானவர் குழுவும்
தோற்ற அடிமைமுன் தோகையில் வந்து
மாற்றார் தம்மை வதைத்தருள் முருக
ஓம்வசிய வசிய ஓங்கார முருக
ஸ்ரீம்ஹ்ரீங் சிவசிவ ஸ்ரீங்கார முருக
சம்சிங் சரவண பவவோம் முருக
ரம்ரங் ரவணப வசஐயும் முருக

ஹ்ரம்ஹுங் வணபவ சரக்லீயும் முருக
ணம்ணங் ணபவச ரவசௌவும் முருக
பம்பங் பவசர வணஹ்ரீயும் முருக
வம்வங் வசரவ ணபஸ்ரீயும் முருக
சிவசிவ சிவசிவ சிவாய நமஹ
சங்கர சங்கர சயிலொளி பவாய
ஓம்திரி புரபவ ஓம்திக ழொளிபவ
ஓம்பரி புரபவ ஓம்பவ ஜொளிபவ
ஓம்குரு பரபவ ஓம்குக ஜொளிபவ
ஓம்சிவ கரபவ ஓம்சிகா ராநம
ஓம்ஆம் க்ரீயும் ஓம்க்லீயும் ஐயும்
ஆம்ஓம் அவ்வும் அம்சிவா யநம
ஊம்ஆம் க்லீயுங் சவ்க்ரீயு ம்ரீயும்
ஓம்ரீயும் க்ரீயும் சவ்க்ரீ ஐயும்
ஆனமுருக அழகிய முருக
வானமுருக வரமருள் முருக
அல்லலாம் தொழிலை அகற்றிடு முருக
பில்லி சூனியம் பெயர்த்தெறி முருக
கட்டமாம் வினையைக் களைந்தெறி முருக
குட்டி மோகினியைக் குலைத்திடு முருக
கறுப்பனை வீரனைக் களைந்திடு முருக
குறிபகர் மாடனைக் கொளுத்திடு முருக
இடாகினி தன்னை இழுத்தெறி முருக
அடாத குறளியை அடக்கிடு முருக

கொள்ளிவாய்ப் பேயைக் குலைத்திடு முருக
நள்ளிருள் முனியை நசித்திடு முருக
துஷ்டதே வதையைத் துரத்திடு முருக
அஷ்டமா சித்தியை அருள்செய் முருக
தலைவலி யதனைத் தவிர்த்திடு முருக
கலைவலி யதனைக் கவித்திடு முருக
மூலமதனை முறித்திடு முருக
சூலையதனைச் சுழற்றிடு முருக
கண்ணோ யதனைக் களைந்திடு முருக
மண்ணோ யதனை மறித்திடு முருக
குன்ம மதனைக் குலைத்திடு முருக
ஜென்ம வினையைத் திருப்பிடு முருக
ஏறிய விஷத்தை யிறக்கிடு முருக
சீறிய மாவைச் சிதைத்திடு முருக
பூக்கமழ் குஞ்சிமுற் புகலு முறுப்பைக்
காக்க முருக காக்க முருக

**வாழி முருக வாழி முருக**
**வாழி முருக வாழி முருக**
**முருக முருக முருக முருக**
**முருக முருக முருக முருகனே.**

# குடமுழுக்கு ஆடியருளே!

கொல்பகை சூரர் மாளக்
 கொண்டகை வேலி ளுேடு
வெல்பகை யேதும் இன்றி
 'இவ்வன்னியில்'' வந்து நின்ற
செல்வமே எங்கள் குல
 தெய்வமே என்று போற்ற
நல்வகை யெமக்குக் காட்டி
 நாதனே குட நீராடு.

கன்னல் பாலில் பக்குவமாய்
 சமைத்து எடுத்த அமுதுண்டு
செந்நெல் புழுங்கல் புளிச்சாதம்
 சேரமிகுந்த தயிர்ச் சாதம்
இன்னும் பலவாம் பண்டங்களும்
 இதமாய் தருவார் நின்அடியார்
இன்னும் ஏனோ தாமதம்
 எங்கள் அரசே குடநீராடு

அருளை வாரி எமக்கருள
அழகார் வள்ளி அமர்கோவே
அருணை நயத்தின் அழகுன்றன்
அடிக்கால் வரைக்கு நிகராமோ
உருகும் அடியார் மனங்குளிர
உமையாள் தந்த முருகோனே
கருணை மூர்த்தி கண்குளிர
கலச நீரால் ஆடியருள்.

— நயினை ஆதி



ஜேஸ்வரி அச்சகம் கொழும்பு-11.

போட்டோ பிரதிகள், தட்டெழுத்
துக்கள், மொழி பெயர்ப்புகள்,
வெளிநாட்டு பிரயாண
டிக்கெட்டுகளுக்கு
நம்பிக்கையுடன் தொடர்பு
வைக்க வேண்டிய
முகவரி

**TRUST SERVICES**

ROOM No. 3.
HIRDARAMANI ARCADE
65 Chatham Street
Colombo-1.

T'phone : 548409
540283 — 6

வெகு விரைவில் எமது சங்கத்தினூடாக இந்து சமய நூல்கள் (தேவார, திருப்புகழ், திருவாசகம்) இந்து சமய சம்பந்தமான படங்கள், வீடியோ படப் பிரதிகள் இலவசமாக வழங்கப்படும். அதே போல் கிறிஸ்தவ நூல்கள், செபமாலைகள் மற்றும், படங்கள், வீடியோ பிரதிகள் பெற்றுக் கொள்ள விரும்புவோர் எமது சங்கதனை நாடவும்.

## இலங்கை இந்து கிறிஸ்தவ

## சங்கம்

[illegible] வீதி, பம்பலப்பிட்டி